**(ஆ) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, "தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவை" அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

**4. 1975-76-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு 16 உறுப்பினர்கள் பேசவிருப்பதால், பேசுகின்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. லத்தீப் அவர்கள் 20 நிமிடங்களில் தங்கள் பேச்சை முடித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டு, அவரைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை ஆதரிக்கும் வகையில் ஒரு சில கருத்துக்களை இங்கே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

பொதுவாக, கடந்த நான்கைந்து நாட்களாக இந்த மன்றத் திலே நடந்த விவாதங்களை நான் மிகவும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டு வந்தேன். இதிலே பேசியவர்கள், குறிப்பாக என்னுடைய பக்கத்திலே உட்கார்ந்துகொண்டிருக்கின்ற நண்பர்